S.பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன் ஜீவல்லரி மார்ட் A/C
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
நகை சேமிப்பிற்கு செய்கூலி, சேதாரம் கிடையாது.
Sri Murugan Jewellery Mart
உரிமையாளர்கள்
P.மணிகண்டன் B.Com., 78452 54592
P.பட்டு சங்கர் B.E., 99946 38971
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069


# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"


SPARES
2 WHEELER
SDK spare parts
HERO HONDA, TVS, BAJAJ, ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்
7540002331 / 9865147105

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 332 25.05.2026 MONDAY VAIKASI : 11 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 332 25.05.2026 திங்கள்கிழமை வைகாசி : 11 விலை : ரூ.5/–

## கோவை சிறுமியின் பெற்றோரிடம் தொலைபேசி மூலம்

# "முதல்வர் விஜய் ஆறுதல்!"

## ரூ.7 லட்சம் நிதியுதவி அளிப்பு

மேட்டூர்: மே.25-

கோவையில் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகி கொலை செய்யப்பட்ட சிறுமியின் குடும்பத்தினரிடம் தொலைபேசி மூலம் பேசி தமிழக முதல்வர் விஜய் ஆறுதல் தெரிவித்தார்.

கோவை மாவட்டம் சூலூர் அருகே 10 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக 2 பேரை போலீஸார் கைது செய்தனர். கோவை அரசு மருத்துவமனையில் சிறுமியின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு, சொந்த ஊரான மேட்டூர் அருகே கொளத்தூர் உக்கம்பருத்தி காடு கிராமத்தில் உள்ள மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்நிலையில் போக்குவரத்துத் துறை அமைச்சர் தமிழன் பார்த்திபன் மற்றும் பிற்படுத்தபட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத்குமார் ஆகியோர் சிறுமியின் பெற்றோரை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர்.

தொடர்ந்து, சிறுமியின் குடும்பத்தினருக்கு ரூ 7 லட்சத்துக்கான காசோலையை வழங்கினர். சிறுமியின் பெற்றோர் மற்றும் பாட்டியை வீட்டின் உள்ளறைக்கு அழைத்துச் சென்று பேசினர். அப்போது, தமிழக முதல்வர் விஜய் சிறுமியின் தந்தை மற்றும் பாட்டியிடம் தொலைபேசி மூலமாக பேசி ஆறுதல் தெரிவித்தார். அப்போது, மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், மாவட்ட எஸ்.பி கவுதம் கோயல் உடனிருந்தனர்.



சிறுமியின் தந்தை மற்றும் பாட்டி நிருபர்களிடம் கூறியதாவது: "இந்த சம்பவம் குறித்து கேட்டதும் மிகுந்த அதிர்ச்சியடைந்தேன். சிறுமியை கொலை செய்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க போலீஸாரிடம் தெரிவித்துள்ளேன். உங்களுக்கு வீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று முதல்வர் விஜய் தெரிவித்ததாக கூறினர்.

பின்னர், போக்குவரத்துறை அமைச்சர் நிருபர்களிடம் கூறியதாவது: இது மிகப்பெரிய இழப்பு. இது தொடர்பாக முதல்வர் வருத்தத்தையும், அறிக்கையும் வெளியிட்டுள்ளார். இது போன்ற எந்த ஒரு சம்பவமும் இனி தமிழ்நாட்டில் நடக்கக் கூடாது என இரண்டு பேரை போலீசார் கைது செய்துள்ளனர். வழக்கு விரைந்து முடித்து கடுமையான தண்டனை வழங்கப்படும். பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு பொது நிவாரண நிதியின் கீழ் ரூ 7 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. என்றார்.

மத்தியமாநில அமைச்சர்கள் நேருக்கு நேர் சந்திப்பு: கோவையில் உயிரிழந்த சிறுமியின் குடும்பத்தினரை சந்தித்து பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் மற்றும் மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் ஆகியோர் ஆறுதல் தெரிவித்து விட்டு வந்தனர். அப்போது, அமைச்சர்கள் தமிழன் பார்த்திபன் மற்றும் சம்பத்குமார் வெளியே காத்திருந்தனர்.

பின்னர், பாஜக தலைவர் மற்றும் மத்திய அமைச்சர் வெளியே வரும் போது தமிழக அமைச்சர்களை நேருக்கு நேராக சந்தித்து பேசி கொண்டனர். அப்போது, தமிழக அமைச்சர்கள் தங்களை அறிமுகப்படுத்தி கொண்டு, கட்சி நிர்வாகிகளையும் அறிமுகப்படுத்தினர். தொடர்ந்து, சிறுமியின் குடும்பத்தினருக்கு வீடு இல்லை, அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். அதற்கு, நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் தமிழன் பார்த்திபன் தெரிவித்தார்.



## திருப்பூரில் புற்றுநோய் விழிப்புணர்வு கூட்டம்: மக்கள் பொது மனித சமூக சேவை அறக்கட்டளை மற்றும் உயிர் ஆர்கானிக் அதிரடி!

திருப்பூர். மே.24:

மக்கள் பொது மனித சமூக சேவை அறக்கட்டளை மற்றும் உயிர் ஆர்கானிக் நிறுவனம் இணைந்து நடத்திய "புற்றுநோய் விழிப்புணர்வு கூட்டம்" திருப்பூரில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வானது அறக்கட்டளையின் நிறுவனர் ஜே.வினோத்குமார் தலைமையில், நிறுவனத் தலைவர் ஆர்.முருகானந்தம் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக 'உயிர் ஆர்கானிக்' தொழிலதிபர் சுஜிதா தேவ விஷ்ணு, 'விநாயகா பிரிண்டர்ஸ்' தொழிலதிபர் பாலு மற்றும் அறக்கட்டளையின் லீகல் அட்வைசர் வழக்கறிஞர் கார்த்திக் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்வின் முத்தாய்ப்பாக, உயரிய மருத்துவச் சிகிச்சைக்குப் போராடிக் கொண்டிருக்கும் 11 வயது பள்ளி மாணவன் ஒருவனுக்கு, நிகழ்விடத்திலேயே உயிர் ஆர்கானிக் தொழிலதிபர் சுஜிதா தேவ விஷ்ணு அவர்கள் உடனடியாக ரூ.10,000 அவசர நிதியுதவியாக வழங்கி மனிதநேயத்தை வெளிப்படுத்தினார்.

இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் எம்.பாபு, துணைச் செயலாளர் முனியப்பன், பொருளாளர் கே.பழனிச்சாமி, இளைஞரணி தலைவர் ஆர்.சதீஷ், அவைத் தலைவர் கோகுலகிருஷ்ணன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் டி.சாம்சங், ஓட்டுனர் சங்கத் தலைவர் எஸ்.மணிகண்டன், மாநிலச் செயலாளர்கள் ரமேஷ், எம்.ஜெயராம், மாவட்டத் தலைவர்கள் ஈஸ்வரமூர்த்தி, முத்து, தொழிற்சங்கத் தலைவர் எ.வெள்ளையன் மற்றும் மகளிர் அணித் தலைவி மேகலா, பியூலா, பிரியா, எப்சிபா, ஜெயந்தி, காயத்ரி, சுப்புலட்சுமி, மோகனப்பிரியா, ஷீலா, ராஜு, மகேஸ்வரி, உமாதேவி, சுகன்யா, ரம்யா ஆகியோர் பங்கேற்றனர். மேலும், நிர்வாகிகள் கருப்பசாமி, பாண்டியன், ஜெயக்குமார், வெங்கடேசன், பிரதாப், கண்ணன், வெங்கட், நாகேந்திரன், சாமி, தருண், முத்து, பிரபு, சின்னச்சாமி, சண்முகம், ராமராஜ், கோபாலகிருஷ்ணன் உட்பட நூற்றுக்கணக்கான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பொதுமக்கள் இந்த உயிர்காக்கும் புனிதச் சேவையில் இணைய 9840574726, 9786501230 ஆகிய எண்களைத் தொடர்பு கொள்ளலாம் என நிர்வாகம் அறிவித்துள்ளது.

சக்கரவியூகம் வாய்ஸ்:

கொடிய நோயான புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை மக்களிடம் கொண்டு சேர்த்ததோடு மட்டுமன்றி, வறுமையில் வாடிய 11 வயது சிறுவனின் மருத்துவச் சிகிச்சைக்கு மேடையிலேயே உடனடியாகப் பத்தாயிரம் ரூபாய் வழங்கி கரம் கொடுத்த உயிர் ஆர்கானிக் சுஜிதா தேவ விஷ்ணு அவர்களின் செயலும், மக்கள் பொது மனித சமூக சேவை அறக்கட்டளையின் இந்த உன்னதப் பணியும் சமுகத்தின் மீதான பெரும் நம்பிக்கையை விதைத்துள்ளது.

## "முஸ்லிம்கள் தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வெளிப்படையாக எழுப்ப வேண்டும்": ராகுல் காந்தி

புதுடெல்லி: மே.25-

டெல்லியில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சிறுபான்மைத் தலைவர்கள் கூட்டத்தில் அக்கட்சியின் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி பேசினார். அப்போது அவர் பேசியது குறித்து காங்கிரஸ் வட்டாரங்கள் கூறுகையில், "கூட்டத்தில் பேசிய தலைவர் ராகுல், எந்தவொரு முஸ்லிமும் அநீதிக்கு ஆளானால், அதை எதிர்த்து குரல் கொடுப்பது அவசியம் என தெரிவித்தார். ஒரு சிறுபான்மைக் குழுவின் உறுப்பினராக மட்டுமல்லாமல், தான் ஒரு 'முஸ்லிம்' என்ற வகையிலும் ஒருவர் தனது குரலை எழுப்ப வேண்டும் என ராகுல் வலியுறுத்தினார்.

இதேபோல், தலித்துகள், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பொதுப் பிரிவினர் பற்றியும் ராகுல் கூட்டத்தில் பேசினார். தங்கள் மீது தாக்குதல்கள் நடந்தால், அந்தக் குறிப்பிட்ட சமூகத்தைத் தெளிவாக அடையாளம் காட்டி அந்தப் பிரச்சினை எழுப்பப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

சமீப காலங்களாக பொதுமக்கள் இடையே, 'முஸ்லிம்' என்று வெளிப்படையாகக் கூறுவதற்குப் பதிலாக 'சிறுபான்மையினர்' என்ற சொல் பயன்படுத்துகிறது என்றும், சிறுபான்மையினரை 'முஸ்லிம்' எனக் குறிப்பிட்டு அழைக்க கட்சியினர் தயங்கக்கூடாது என்றும் ராகுல் காந்தி குறிப்பிட்டார்" என தெரிவித்தன.

கடந்த 2014ல் பாஜக தலைமையிலான ஆட்சிக்கு பிரதமராக நரேந்திரமோடி வந்திலிருந்து சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் அதிகரித்திருப்பதாகக் கருதப்படுகிறது. இதை அரசியலாக்கும் பொருட்டு காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி இக்கூட்டத்தை நடத்தியதாக கூறப்படுகிறது.

## 2028 ஒலிம்பிக்கில் தமிழக வீரர்கள் பதக்கம் வெல்ல அனைத்து உதவிகளும் வழங்கப்படும்: ஆதவ் அர்ஜுனா

சென்னை: மே.25-

2028ஆம் ஆண்டு நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டிகளில் நமது வீரர் / வீராங்கனைகள் பதக்கங்கள் வெல்வதற்கு ஏற்ப, தேவையான அனைத்து உதவிகளையும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை வழங்கும் என்று அமைச்சர் ஆதவ் அர்ஜுனா உறுதிபட தெரிவித்துள்ளார்.

உலகக் கோப்பை ஸ்குவாஷ் போட்டியில் வெற்றி பெற்ற தமிழக வீரர்களை, பொதுப்பணி மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, நேற்று (23.05.2026) தலைமைச் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார். அப்போது அவர் பேசியது குறித்து தமிழக அரசு அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில், "தமிழ்நாடு முதல்வர் பொறுப்பேற்றது முதல் தொலைநோக்கு பார்வையுடன் பல்வேறு சிறப்பான திட்டங்களை தீட்டி வருகிறார். ஒலிம்பிக் போட்டிகளில் தமிழ்நாட்டின் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பதக்கங்களை வெல்ல செயல்திட்டங்கள் வகுக்கப்பட்டுவருகின்றன.

இந்த இலக்கினை அடைந்திடும் வகையில் எனது அலுவலக பணிகளை நாள்தோறும் காலை 7 மணிக்கு நேரு உள்விளையாட்டு அரங்கில் தொடங்கி, விளையாட்டுத் துறை உயர் அலுவலர்கள், விளையாட்டு வீரர்கள், விளையாட்டு சங்க நிர்வாகிகளுடன் இணைந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் நீங்கள் எவ்வித சிரமுமின்றி எளிதாக என்னை எப்போது வேண்டுமானாலும் அணுகி உங்களது தேவைகளை தெரிவிக்கலாம்.



இதுவரை ஒலிம்பிக் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர்கள் ஹாக்கி உள்ளிட்ட குழுப் போட்டிகளில் மட்டுமே பதக்கங்கள் பெற்றுள்ளனர்; தனிநபர் பிரிவு போட்டிகளில் இதுவரை நாம் பதக்கங்கள் பெற்றதில்லை. இனி வருங்காலங்களில் இந்நிலையை மாற்றி, ஒலிம்பிக் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த உங்களைப் போன்ற இளைஞர்கள் அதிக அளவில் பங்கேற்று, தனிநபர் பிரிவுகளிலும் பதக்கங்கள் வெல்லும் வகையில் தொலைநோக்கு செயல்திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஒலிம்பிக்கில் பதக்கங்கள் வெல்வதை நோக்கமாக கொண்டு இதற்கென அரசு உயர் அலுவலர்கள், விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் எனது கைபேசி எண்ணை உள்ளடக்கிய வாட்ஸாப் குழு உருவாக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கங்கள் வெல்வது எவ்வளவு கடினமான முயற்சி என்பது விளையாட்டு வீரர் என்ற முறையில் எனக்கு நன்றாகத் தெரியும். எனவே, விளையாட்டு அறிவியல் அடிப்படையிலான பயிற்சிகள், ஊட்டச்சத்து மிக்க உணவு, உயர்தர பயிற்சி முகாம்கள், உளவியல் நிபுணர்களின் ஆலோசனைகள், சிறந்த பயிற்சியாளர்கள் உள்ளிட்ட அனைத்து தேவையான உதவிகளையும் வழங்கி, இந்தியாவை பதக்க மேடையில் நிலைநிறுத்தி தமிழகத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க விளையாட்டுத் துறை தயாராக உள்ளது.

குறிப்பாக வரும் ஒலிம்பிக் போட்டியில் ஸ்குவாஷ் விளையாட்டு முதன்முறையாக சேர்க்கப்பட்டுள்ளது. கடந்தாண்டு ஸ்குவாஷ் உலகக் கோப்பைப் போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணியில் 4 வீரர்களில் 3 பேர் நம் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது பெருமைக்குரிய சாதனையாகும். இந்த உலகக் கோப்பை வெற்றியை தொடர்ந்து நம் அடுத்த இலக்காக ஒலிம்பிக் போட்டியில் பதக்கங்கங்கள் வெல்வதேதாகும்.

அந்த வகையில் 2028ஆம் ஆண்டக்கான ஒலிம்பிக்கில் பதக்கங்கள் வெல்ல விளையாட்டு மேம்பாட்டுத் துறை தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கலந்துரையாடலில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு செயலாளர் சஜ்ஜன்சிங் ராசவான், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மாவட்ட வருவாய் அலுவலர் ரெ. சுமன், பொது மேலாளர் எல். சுஜாதா மற்றும் தமிழ்நாடு ஸ்குவாஷ் சங்க பொதுச் செயலாளர் சைரஸ் பூன்ச்சா, ஸ்குவாஷ் விளையாட்டு வீரர் அபய் சிங், பயிற்சியாளர் மற்றும் ஸ்குவாஷ் விளையாட்டு வீராங்கனைகள் உடனிருந்தனர்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

# சாலைகளில் தொழுகை நடத்த விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து வழக்கு போடுங்கள்: மம்தா உத்தரவு



சென்னை, மே.25–

மேற்கு வங்க முன்னாள் முதல்வரும் திரிணமூல் காங்கிரஸ் (டிஎம்சி) தலைவருமான மம்தா பானர்ஜி நேற்று முன்தினம் தனது இல்லத்தில் ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். இதில் கொல்கத்தா மாநகராட்சியின் டிஎம்சி கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர். இந்த ஆண்டு இறுதியில் கொல்கத்தா மாநகராட்சிக்கு தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் கட்சியின் தயார் நிலையை ஆய்வு செய்ய மம்தா இந்தக் கூட்டத்தை நடத்தினார்.

இந்தக் கூட்டத்தில், சாலைகளில் தொழுகை நடத்த முஸ்லிம்களுக்கு மாநில அரசு தடை விதித்துள்ளது குறித்தும் விவாதிக்கப்பட்டது. அப்போது மேட்டியாபுருஜ் பகுதி டிஎம்சி கவுன்சிலரை, இப்பிரச்சினை தொடர்பாக நீதிமன்றத்தை அணுகுமாறு மம்தா அறிவுறுத்தியுள்ளார். எனவே அந்த கவுன்சிலர் இந்த விவகாரம் குறித்து விரைவில் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், முதல்வர் சுவேந்து அதிகாரி அரசின் கடுமையான நடவடிக்கைகள் தொடர்ந்ததால் கடந்த வெள்ளிக்கிழமை கொல்கத்தாவின் ராஜாபஜார், தபாசியா, பார்க் சர்க்கஸ், தில்ஜலா ஆகிய பகுதிகளில் சாலைகளை மறித்து தொழுகை நடத்தப்படவில்லை.

மசூதிகளில் இரண்டு கட்டங்களாக இருவேறு நேரங்களில் தொழுகைக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதனால் முஸ்லிம்கள் மசூதிகளுக்கு உள்ளேயே தங்கள் தொழுகையை முடித்துக் கொண்டனர்.

கொல்கத்தா மாநகராட்சியில் மொத்தம் 144 வார்டுகள் உள்ளன. மாமன்றத்தில் டிஎம்சி சார்பில் 136 கவுன்சிலர்கள் உள்ளனர். கடந்த மாதம் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜகவிடம் டிஎம்சி படுதோல்வியை சந்தித்தது.

இச்சூழலில், வரும் மாநகராட்சித் தேர்தலை முன்னிட்டு, கட்சித் தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு புத்துணர்ச்சியூட்ட அக்கட்சி தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது.

மம்தா முதல்வராக இருந்தபோது பக்ரீத் பண்டிகைக்கு 2 நாள் அரசு விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது ஒரு நாளாக மாற்றப்பட்டுள்ளது. வரும் மே 28ல் பக்ரீத் பண்டிகை கொண்டாடப்பட உள்ளது.

# "சாக்கு போக்கு சொல்லாமல் மின்வெட்டை போக்க போர்க்கால நடவடிக்கை தேவை" பழனிசாமி



சென்னை, மே.25–

"இப்போதுதான் ஆட்சிக்கு வந்திருக்கிறோம் என்று சாக்கு போக்கு சொல்லாமல் மின் வெட்டைப் போக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என தவெக அரசை அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத் தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "கோடை காலம் வந்தாலே தமிழகத்தின் மின் தேவை அதிகரிக்கும் என்பது அனைவரும் அறிந்தது. பகல் நேரங்களில் வீட்டு மின் உபயோகம் அதிகரிக்கும். அதே நேரம், தொழிற்சாலைகளின் மின் உபயோகமும் கூடுதலாகும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலங்களில், ஆண்டுதோறும் கோடைகால மின் தேவையை சமாளிக்க முன்கூட்டியே முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்படும்.

2011ல் ஜெயலலிதா ஆட்சிப் பொறுப் பேற்கும்போது, தமிழகம் முழுவதும் தினமும் 10 மணி நேரத்திற்குமேல் மின்வெட்டு என்ற கடுமையான நிலைமை இருந்தது. அதை இரண்டு, மூன்று ஆண்டுகளிலேயே அவர் மாற்றினார். இதனால், அதிமுக ஆட்சியில் தமிழ் நாடு மின் மிகை மாநிலமாக விளங்கியது.

மேலும், கோடை காலத்தில் கூடுதல் மின் தேவை ஏற்படுவதை கணக்கிட்டு காற்றாலை, சோலார் மற்றும் அனல் மின் நிலையங்களில் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுத்ததுடன், மத்திய அரசு மற்றும் தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து குறுகிய கால ஒப்பந்த அடிப்படையில் மின்சாரம் கொள்முதல் செய்யப்பட்டு, மக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டது.

புதிதாக ஆட்சிக்கு வந்துள்ளவர்களின் மேம் போக்கான மற்றும் உறுதியற்ற நடவடிக்கைகளால், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கடும் மின் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இரவு நேரங்கள் மக்களுக்கு தூங்கா இரவுகளாக மாறியுள்ளது கொடுமையான ஒன்றாகும். பகல் நேர மின் வெட்டால் சமையல் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு பாதிப்புகள் ஏற்பட்டு பொதுமக்களின் தினசரி இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்படாத மின்வெட்டை எதிர்த்து, பாதிக்கப்பட்ட மக்கள் மின்சார அலுவலகத்தை முற்றுகையிடுவதையும், சாலைகளில் போராடுவதையும் ஊடகங்கள் செய்திகளாக வெளியிடுகின்றன. சென்னை புறநகர் பகுதிகளில் இரவில் பலமுறை மின் வெட்டு ஏற்படுவதாகவும், குறிப்பாக சென்னை தண்டையார்பேட்டையில் இரண்டாவது நாளாக இரவு நேரங்களில் மின்சாரம் இல்லாத நிலையில், பாதிக்கப்பட்ட மக்கள் புறநகர் பகுதிகளில் சாலையில் இறங்கி போராடுவதாகவும் செய்திகள் வருகின்றன.

இந்த அரசின் அறிவிக்கப்படாத மின் வெட்டால் மக்களின் அன்றாட வாழ்க்கை மட்டுமல்ல, சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. சிறு வணிகர் முதல் பெரிய நிறுவனங்கள் வரை பொருளாதார பாதிப்பிற்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, புதிதாக பொறுப்பேற்றுள்ள அரசு, `இப்போதுதான் ஆட்சிக்கு வந்திருக்கிறோம்' என்று சாக்கு போக்கு சொல்லாமல் மின் வெட்டைப் போக்க போர்க்கால அடிப் படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத் துகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

# நீட் தேர்வு விண்ணப்ப தொகை திரும்பப் பெற வங்கிக் கணக்குகளை மே 27 வரை பதிவேற்றலாம்



சென்னை, மே.25–

நீட் தேர்வு விண்ணப்பத் தொகையைத் திரும்பப் பெற தேர்வர்கள் தங்களது வங்கி விவரங்களை மே 27 வரை பதிவேற்றலாம் என்று தேசிய தேர்வு முகமை (என்டிஏ) அறிவித்துள்ளது.

நீட் தேர்வு வினாத்தாள் கசிவு காரணமாக இந்த மாதம் 3ம் தேதி நடைபெற்ற நீட் தேர்வு ரத்து செய்யப்பட்டது. இதையடுத்து புதிய தேர்வு வரும் ஜூன் 21ம் தேதி நடைபெறும் என்று என்டிஏ அறிவித்துள்ளது.

இந்நிலையில் 2026 நீட் தேர்வர்களுக்காக ஒரு புதிய இணையதளத்தை நேற்று முன்தினம் என்டிஏ தொடங்கியுள்ளது. தேர்வர்கள் தங்களது தேர்வு விண்ணப்பத் தொகையைத் திரும்பப் பெறுவதற்காக அந்த இணையதளத்தை அணுகி தங்களது வங்கி விவரங்களை வரும் 27ம் தேதி வரை பதிவேற்றலாம்.

வரும் 27ம் தேதி இரவு 11.50 மணி வரை தேர்வர்கள் தங்களது வங்கி விவரங்களை பதிவேற்ற முடியும். அந்த இணையதளத்தில் தேர்வர்களின் பெயர் விவரம், வங்கியின் பெயர், வங்கிக் கணக்கு எண், ஐஎஃப்எஸ்சி கோட், ரத்து செய்யப்பட்ட வங்கிக் காசோலை (ஸ்கேன் செய்யப்பட்ட நகல்) ஆகியவற்றை அதில் பதிவு செய்ய வேண்டும்.

வரும் 27ம் தேதி இரவு 11.50 மணி வரை பதிவேற்றப்படும் தகவல்களே இறுதியானவை என்று என்டிஏ அறிவிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# 11, 12ம் வகுப்புகளுக்கும் மதிய உணவு திட்டம் தெலங்கானா அமைச்சரவை ஒப்புதல்




தெலங்கானா, மே.25–

தெலங்கானாவில் உள்ள அரசுப்பள்ளிகளில் (ஜூனியர் கல்லூரிகள்) 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கும் மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப் படுத்த அம்மாநில அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

தெலங்கானா மாநில அமைச்சரவைக் கூட்டம் முதல்வர் ரேவந்த் ரெட்டி தலைமையில் (சனிக்கிழமை) நடை பெற்றது. இதன் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய தகவல் மற்றும் மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் பொங்குலேட்டி சீனிவாச ரெட்டி, "காங்கிரஸ் அரசு முதல் கட்டமாக சுமார் ரூ. 22,500 கோடி செலவில் 4.50 லட்சம் வீடுகளுக்கு ஒப்புதல் அளித்திருந்தது. தற்போது ஒவ்வொரு சட்டப்பேரவைத் தொகுதிக்கும் 2,000 வீடுகள் வீதம் ஒதுக்கீடு செய்யப்படும்.

ஹைதராபாத் பெருநகர பகுதியில் உள்ள 24 சட்டப்பேரவை தொகுதிகளில், குறைந்த வருவாய் பிரிவினருக்காக ஒரு லட்சம் வீடுகளைக் கட்ட அமைச்சரவை முடிவு செய்துள்ளது. மேலும், மாநிலத்தில் உள்ள அனைத்து ஜூனியர் கல்லூரிகளிலும் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தவும் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

டாவோஸில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றக் (WEF) கூட்டத்திற்கு முதல்வர் ரேவந்த் ரெட்டி சென்றிருந்தபோது வெளியிட்ட, 'அடுத்த தலைமுறை உயிரியல் அறிவியல் கொள்கை 2026–30' (Next-Generation Life Sciences Policy) திட்டத்திற்கும் அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் 25 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிலான முதலீட்டையும், ஐந்து லட்சம் வேலைவாய்ப்புகளையும் ஈர்ப்பதை இக்கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மின் விநியோகம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, மத்திய அரசின் 'RDSS' (மேம்படுத்தப்பட்ட மின் விநியோகத் துறைத் திட்டம்) திட்டத்தில் இணைவதற்கான மாநில மின் விநியோக நிறுவனங்களின் (DISCOM) முன்மொழிவுகளுக்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. 'பாலமூரு ரங்கா ரெட்டி' நீர்ப்பாசனத் திட்டத்திற்காக நிலம் கையகப்படுத்துதல் மற்றும் பிற பணிகளுக்காக ரூ. 587 கோடியை ஒதுக்கீடு செய்யவும் அமைச்சரவை முடிவு செய்துள்ளது" என்று கூறினார்.

# மூடப்பட்ட டாஸ்மாக் கடை பணியாளர்களுக்கு மாற்றுப்பணி: மேலாண் இயக்குநர் உத்தரவு




சென்னை, மே.25–

மூடப்பட்ட டாஸ்மாக் கடைகளின் பணியாளர்களுக்கு மாற்றுப்பணி வழங்கப்படும் என மேலாண் இயக்குநர் உத்தரவிட்டுள்ளார்.

தமிழக முதல்வராக பொறுப்பேற்ற விஜய், 717 டாஸ்மாக் கடைகளை மூட உத்தரவிட்டார். அதன்படி வழிபாட்டு தலங்கள் அருகிலுள்ள 276 கடைகள், கல்வி நிறுவனங்கள் அருகிலுள்ள 186 கடைகள், போக்குவரத்து முனையங்கள் அருகே 500 மீட்டர் தொலைவுக்குள் செயல்படும் 255 டாஸ்மாக் கடைகளை மூடும் பணிகள் நடைபெற்றது.

இந்நிலையில் மூடப்படும் கடைகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு மாற்றுப் பணி ஏற்படுத்த வேண்டும் என பணியாளர்கள் சார்பில் கோரிக்கை விடுத்து வந்தனர். அதைத்தொடர்ந்து, மூடப்பட்ட டாஸ்மாக் கடைகளில் பணியாற்றிய ஊழியர்களை காலி பணியிடங்களின் அடிப்படையில் அருகே உள்ள டாஸ்மாக் கடைகளிலும் மற்றும் மாவட்ட நிர்வாக அலுவலகங்களிலும், டாஸ்மாக் கிடங்குகளிலும் பணியமர்த்த டாஸ்மாக் மேலாண் இயக்குநர் நந்தகுமார் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து அனைத்து முதுநிலை மண்டல மற்றும் மாவட்ட மேலாளர்களுக்கு அவர் அனுப்பிய சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: அரசு அறிவிப்பின்படி மூடப்பட்ட கடைகளில் பணிபுரிந்த கடைப் பணியாளர்களை பணி மூப்பு அடிப்படையில் பட்டியல் தயார் செய்து, அவர்களை மூடப்பட்ட கடைகளுக்கு அருகிலுள்ள மதுபான சில்லறை விற்பனை கடைகளில் பணியமர்த்த வேண்டும்.

எஞ்சிய பணியாளர்களை கிடங்கு பணிகளிலும், மாவட்ட அலுவலக பணிகளிலும் பணி நிரவல் செய்ய வேண்டும். இவ்வாறு மேலாண் இயக்குநர், அனைத்து முதுநிலை மண்டல மற்றும் மாவட்ட மேலாளர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.




# பட்டதாரிகளுக்கு வேலை கோரி மதுரையில் 'காக்ரோச்' பேரணி

மதுரை, மே.25–

படித்த பட்டதாரி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க கோரி மதுரையில் 'காக்ரோச்' என்ற பெயரில் இளைஞர்கள் பேரணி சென்றனர். உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் வழக்கு விசாரணை ஒன்றில், 'வேலையில்லா இளைஞர்கள் கரப்பான் பூச்சிகளை போல மாறி மீடியா, சமூக ஊடகவியளார்கள், தகவல் அறியும் ஆர்வலர்களாகி எல்லாரையும் தாக்குகிறார்கள் என்றார். இது சர்ச்சையான நிலையில், இணையத்தில் கரப்பான் பூச்சி ஜனதா கட்சி (சிஜேபி) என்ற நையாண்டி குழு தொடங்கப்பட்டது. நையாண்டி கட்சியான சிஜேபிக்கு கோடிக்கணக்கான இளைஞர்கள் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், படித்த பட்டதாரி இளைஞர்களுக்கு வேலை வழங்க கோரியும், பெட்ரோல், டீசல் விலை உயர்வை கண்டித்தும் மதுரையில் 'காக்ரோச்' என்ற பெயரில் இளைஞர்கள் இன்று பேரணி சென்றனர். காந்தி மியூசியத்தில் இருந்து தொடங்கிய இந்த பேரணி தமுக்கம் மைதானம் வரை நடந்தது. இதில் மாநகர் புறநகர் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம், காக்ரோச் ஜனதா கட்சியினர் உட்பட ஏராளமான இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

# "மேகேதாட்டு திட்டம் குறித்த டி.கே.சிவகுமாரின் பேச்சை முதல்வர் விஜய் கண்டிக்க வேண்டும்": சீமான்



சென்னை, மே.25–

"மேகேதாட்டு திட்டத்தை எதிர்க்க தமிழ்நாட்டுக்கு எந்த உரிமையும் இல்லை எனப் பேசியிருக்கும் கர்நாடக துணை முதல்வர் டி.கே. சிவகுமாரின் பேச்சை முதல்வர் விஜய் கண்டித்து, மேகேதாட்டுவில் அணை கட்டும் கர்நாடக அரசின் முயற்சிக்கு தமிழ்நாட்டு அரசின் சார்பாக எதிர்ப்பினைத் தெரிவிக்க வேண்டும்" என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத் தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'காவிரியாற்றின் குறுக்கே மேகேதாட்டுவில் அணைகட்டும் கர்நாடக அரசின் திட்டத்தை எதிர்க்க தமிழ்நாட்டுக்கு எந்த உரிமையும் இல்லை எனப் பேசியிருக்கும் கர்நாடக துணை முதல்வர் டி.கே. சிவகுமாரின் பேச்சு அடாவடித்தனத்தின் உச்சம்; காவிரி நதிநீர் உரிமையை முழுமையாகத் தங்களுக்கென சொந்தமாக்கத் துடிக்கும் மோசடித்தனத்தின் வெளிப்பாடு.

கன்னடம் எனும் மொழி பிறப்பதற்கும், கர்நாடகா எனும் மாநிலம் பிறப்பதற்கும் முன்பிருந்தே, காவிரிக்கும், தமிழ்நாட்டுக்கும் வரலாற்று வழி உயிர்த்தொடர்பு இருக்கிறது. அதனை முற்றாக அறுத்து, உலக நதிநீர் பங்கீட்டு விதிகளுக்கு நேர்மாறாக, காவிரி நதிநீர் உரிமையை கர்நாடகத்துக்கு மட்டுமானதாக உரிமை கொண்டாடத் துடிக்கும் சூழ்ச்சியின் வெளிப்பாடே மேகேதாட்டுவில் அணைகட்டும் வஞ்சகச்செயல். அதனை தமிழர்கள் நாங்கள் தட்டிக் கேட்காது, வேறு யார் கேட்பார்? காவிரியில் தமிழர்கள் எங்களுக்கில்லாத உரிமை வேறு யாருக்கு இருக்கிறது?

காவிரி நதிநீர் உரிமை என்ன கர்நாடகத்துக்கு மட்டுமான சொத்தா? ஒரு ஆற்றின் தலைப்பகுதியில் வாழ்பவர்களைவிட கடைமடைப் பகுதியில் வாழ்பவர்களுக்கே ஆற்றின் மீது அதிக உரிமை எனும் நதிநீர் பங்கீட்டு விதிகளின்படி, காவிரியின் மீது கர்நாடகத்தைவிட தமிழ்நாட்டுக்குத்தான் அதிக உரிமை இருக்கிறது. அப்படியிருக்கையில், டி.கே.சிவகுமாரின் பேச்சு ஆணவத்தின் வெளிப்பாடு. அதனை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

ஆகவே, கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவகுமாரின் ஆணவப்பேச்சை முதல்வர் விஜய் கண்டித்து, மேகதாதுவில் அணை கட்டும் கர்நாடக அரசின் முயற்சிக்கு தமிழ்நாட்டு அரசின் சார்பாக எதிர்ப்பினைத் தெரிவிக்க வேண்டுமென வலியுறுத்துகிறேன்.' எனத் தெரிவித்துள்ளார்.

# ஆர்.எஸ்.எஸ். பெற்ற பிள்ளையை சீராட்டி வளர்க்க போயிருக்கிறாரா? திருமாவுக்கு எதிராக விசிகவுக்குள்ளேயே வெடிக்கும் விமர்சனம்



சென்னை, மே.25–

'தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு திமுக தலைமையிலான கூட்டணியை காப்பாற்றும் வலிமை எனக்கு இல்லை' என்று விசிக தலைவர் திருமாவளவன் விவரித்திருக்கும் நிலையில், "ஆர்எஸ்எஸ் பெற்றெடுத்த பிள்ளைதான் விஜய் என்று சொன்ன திருமா, இப்போது அந்தப் பிள்ளையை சீராட்டி, தாலாட்டி வளர்த்தெடுக்கப் போயிருக்கிறாரா... இப்போது அம்பேத்கர், பெரியார் எல்லாம் எங்கே போனார்கள்..?" இப்படியொரு விமர்சனம் விசிக வட்டாரத்துக்குள்ளேயே இப்போது ஓடிக் கொண்டிருக்கிறது.

இந்த விமர்சனத்தை பற்றவைத்திருக்கும் விசிக முக்கிய நிர்வாகிகளிடம் இதுகுறித்து பேசினோம். "எப்போதுமே முடிவுகளை தெளிவாக எடுக்கும் திருமா, இந்தத் தேர்தலில் ரொம்பவே நிலை தடுமாறிவிட்டார். திமுக விடம் 10 தொகுதிகளும் ஒரு ராஜ்ய சபா சீட்டும் கேட்டிருந்தாலும் தந்திருப்பார்கள்.

ஆனால், ஏனோ அதை அழுத்திக் கேட்கும் நிலையில் அவர் இல்லை. அதனால், போனதும் காபியைக் குடித்துவிட்டு 8 சீட்டுக்கே ஓகே சொல்லி விட்டு வந்துவிட்டார். அதேசமயம், ஆளூர் ஷா நவாஸ், பனையூர் பாபு ஆகியோர் திமுக அனுதாபிகளாக இருக்கிறார்கள். அதனால் இம்முறை அவர்களுக்கு சீட் தருவதில்லை என்றும் முன்கூட்டியே முடிவாகிவிட்டது.

அதனால்தான் தொகுதிகள் எண்ணிக்கை முடிவானதும் 3 நாட்கள் டெல்லியில் போய் முடங்கினார் திருமா. திமுக தொடர்ச்சியாக அழைத்த பிறகே தொகுதிகளை இறுதி செய்ய டெல்லியிலிருந்து கிளம்பி வந்தார். தொகுதிகள் முடிவானதும் அலைபேசியை அணைத்து வைத்துவிட்டு ஓட்டல் ஓட்டலாக மாறிமாறி ஓடிக்கொண்டு இருந்தார்.

யாரும் எதிர்பாராத விதமாக காட்டுமன்னார்கோவில் தொகுதியில் தானே போட்டியிடப் போவதாக அறிவித்த திருமா, 'தொங்கு சட்டமன்றம் அமையலாம்' என்று பலர் முன்னிலையில் அதற்கான காரணத்தைச் சொன்னார். இது திமுக தலைமைக்கு தெரிந்ததும் அவர்கள் டோட்டல் அப்செட். திருமா சட்டப்பேரவைக்கு வந்தால் அவரது சிதம்பரம் மக்களவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கு மீண்டும் 50 கோடியை யார் செலவழிப்பது என்ற கேள்வி திமுக தரப்பில் எழுப்பப்பட்டது.

இதுபோன்ற காரணங்களால் தனது முடிவை மாற்றிக்கொண்ட திருமா, தனக்குப் பதிலாக, காங்கிரஸ்காரரான ஜோதிமணியை காட்டுமன்னார்கோவில் வேட்பாளராக்கினார். அந்தத் தொகுதியின் அப்போதைய சிட்டிங் எம்எல்ஏவான சிந்தனைச் செல்வன் மீண்டும் அந்தத் தொகுதியையே கேட்டு மன்றாடியும் அவர் மனம் மாறவில்லை. இந்த நடவடிக்கைகள் அனைத்துமே திமுக விசிக தொண்டர்கள் இடையே இணக்கத்தை உருவாக்கவில்லை. இது திருமாவுக்கும் தெரியும். அதனால்தான் வாக்கு எண்ணிக்கைக்கு முன்பே, 'சில இடங்களில் விசிக தோழர்கள் திமுக வேட்பாளர்களுக்கு ஒத்துழைப்புத் தரவில்லை' என்று அவரே சொன்னார்.

விசிக கேட்ட தொகுதிகளை திமுக கொடுக்கவில்லை என்று சொன்ன திருமா, 'பல்லாவரம் கேட்டோம் பண்ருட்டியைக் கொடுத்தார்கள், அரூரைக் கேட்டோம் அரக்கோணம் கொடுத்தார்கள்' என்றெல்லாம் புலம்பினார். ஆனால், அப்படியெல்லாம் கேட்கவில்லை என்று திமுக தரப்பில் இருந்தே எங்களுக்குச் சொன்னார்கள். அப்படியே கேட்ட தொகுதிகள் கிடைக்காவிட்டாலும் ஷா நவாஸுக்காக அவரது சிட்டிங் தொகுதியான நாகையையாவது கேட்டு வாங்கிஇருக்கலாமே... இருபது வருடங்களுக்கும் மேலாக கட்சிக்காக உழைத்தவர்களை விட்டுவிட்டு காங்கிரஸ் காரரை வம்படியாய் இழுத்துவந்து நிறுத்த வேண்டிய அவசியம் என்ன வந்தது?

தேர்தலுக்கு முன்புதான் இப்படி என்றால் ரிசல்ட்டுக்குப் பிறகு திருமா எடுத்த முடிவுகளும் குழப்பத்தின் உச்சம். தன்னைச் சந்தித்த கூட்டணித் தோழர்களிடம் 'நீங்கள் என் கூடவே இருங்கள்' என்று கேட்டுக் கொண்டார் ஸ்டாலின். ஆனால் ஆதவ் அர்ஜுனா, 'நீங்கள் கம்யூனிஸ்ட்களையும் அழைத்துக்கொண்டு வந்துவிடுங்கள்' என திருமாவுக்கு அசைன்மென்ட் கொடுத்தார். கம்யூனிஸ்ட்களும் முதல் ஆளாக தவெக ஆதரவு நிலைப்பாட்டை எடுத்துவிட்டார்கள். அதன் பிறகுதான் 'திருமாவை முதல்வராக்குகிறோம்' என்று அதிமுகவும் திமுகவும் சேர்ந்தே ஆஃபர் வைத்தன.

அதனால் தனது முடிவை அறிவிக்காமல் தாமதப்படுத்திய திருமா, இது விஷயமாக கம்யூனிஸ்ட்களிடமும் பேசினார். ஆனால் அவர்களோ, 'தோழர் இது எங்களின் பொலிட் பீரோ எடுத்த முடிவு; அப்படி எல்லாம் மாற்ற முடியாது' என தங்கள் நிலைப்பாட்டில் உறுதியாக இருந்துவிட்டார்கள். பாமகவும் திருமாவை முதல்வராக்க சம்மதிக்கவில்லை. இத்தனைக்கும் பிறகுதான் தவெக அரசுக்கு ஆதரவளிக்கும் முடிவுக்கு வந்தார் திருமா.

அதைத்தொடர்ந்து, வன்னி அரசுவை அமைச்சர் பதவிக்கு சிபாரிசு செய்வதில் விசிகவுக்குள் இரண்டு விதமான கருத்துகள் வெடித்தன. அவரை அமைச்சராக்கினால் இன்னொரு பவர் சென்டர் ஆகிவிடுவார் என்று சிலர் சந்தேகம் கிளப்பினார்கள். தவெக தரப்பும், திருமாவே அமைச்சரானால் நன்றாக இருக்கும் என தனது விருப்பத்தைச் சொன்னது. இருப்பினும் கட்சியைக் காப்பாற்ற வேண்டிய கட்டாயத்தில் இருப்பதால் வன்னி அரசுக்கே வாய்ப்பளித்தார் திருமா. இனி என்ன நடக்கப் போகிறது என்று தெரியவில்லை" என்று சொல்லி முடித்தார்கள்.

"விஜய் சினிமா தியேட்டரில் விசில் அடிக்கட்டும்... சட்டமன்றத்தில் விசில் அடிக்க வேண்டாம்" என்று சொன்ன திருமா, இந்த விமர்சனங்களை எல்லாம் எப்படி சமாளிக்கப் போகிறார் என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

# பழநி பெரியநாயகியம்மன் கோயில் வைகாசி விசாக திருவிழா கொடியேற்றத்துடன் தொடக்கம்

பழநி, மே.25–

பழநி பெரியநாயகியம்மன் கோயிலில் வைகாசி விசாகத் திருவிழா (மே 24) காலை கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவின் முக்கிய நிகழ்வாக மே 30ம் தேதி மாலை தேரோட்டம் நடைபெறுகிறது.



திண்டுக்கல் மாவட்டம் பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் உப கோயிலான பெரியநாயகியம்மன் கோயிலில் வைகாசி விசாகத் திருவிழாவை முன்னிட்டு சேவல், மயில், வேல் படங்கள் பொறிக்கப்பட்ட கொடிக்கு சிறப்பு பூஜை செய்யப்பட்டு இன்று (மே 24) காலை 8.30 மணிக்கு மேல் கொடியேற்றம் நடைபெற்றது.

முன்னதாக, முத்துக்குமாரசுவாமி, வள்ளி, தெய்வானைக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் தீபாராதனை நடைபெற்றது. கொடியேற்ற நிகழ்ச்சியில் கோயில் இணை ஆணையர் மாரிமுத்து, கண்காணிப்பாளர் அழகர்சாமி, அறங்காவலர் அன்னபூரணி உட்பட திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

பத்து நாட்கள் நடைபெறும் திருவிழாவில் தினமும் சுவாமி ரத வீதிகளில் தங்க மயில், வெள்ளி மயில், ஆட்டுக்கிடா, காமதேனு உள்ளிட்ட வாகனங்களில் வீதியுலா வந்து பக்தர்ளுக்கு காட்சியளிப்பார்.

விழாவின் 6ம் நாளான மே 29ம் தேதி இரவு 7.30 மணிக்கு மேல் திருக்கல்யாணம் நடைபெற உள்ளது. விழாவின் முக்கிய நிகழ்வாக மே 30ம் தேதி காலை 10.30 மணிக்கு மேல் தேரேற்றம், மாலை 4.30 மணிக்கு மேல் தேரோட்டம் நடைபெற உள்ளது. நான்கு ரத வீதிகளில் வள்ளி, தெய்வானை சமேத முத்துக்குமாரசுவாமி தேரில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார். ஜூன் 2ம் தேதி காலை திருவூடல் நிகழ்ச்சியும், இரவில் கொடி இறக்கத்துடன் விழா நிறைவு பெறுகிறது.

# த.வெ.க., உடன் காங்கிரஸ் விரைவாக கூட்டணி அமைத்தது ஏன்? மாணிக்கம் தாகூர் விளக்கம்

சிவகாசி, மே.25–

பாஜக ஆணைப்படி திமுகவும் அதிமுகவும் கூட்டணி அமைப்பதாக தகவல் வந்ததை அடுத்தே, தவெக உடன் காங்கிரஸ் கட்சி கூட்டணி அமைத்ததாக அக்கட்சியின் எம்பி மாணிக்கம் தாகூர் தெரிவித்துள்ளார்.





சிவகாசியில் செய்தியாளர் களிடம் பேசிய காங்கிரஸ் எம்பி மாணிக்கம் தாகூர், “எதிர்கட்சித் தலைவராக பொறுப்புடன் செயல்படவேண்டிய உதயநிதி பொறுப்பு இல்லாமல் பேசி உள்ளார். 60 வயதுக்கு மேற்பட்டவர்களை வைத்துக் கொண்டு இளைஞரணி கூட்டத்தை கூட்டி காங்கிரசுக்கு எதிராக பேசி உள்ளார். அவரை துணை முதல்வராக தோளில் சுமந்தது காங்கிரஸ்.

பாஜக ஆணைப்படி அதிமுக, திமுக கூட்டணி அமைப்பதாக தகவல் வந்ததை அடுத்துதான் தவெக உடன் கூட்டணி அமைத்தோம். விஜய் முதல்வராக கூடாது என பாஜக நினைத்தது. மே 4 ம் தேதி மாலை பாஜக மூத்த தலைவர் பேசி அதிமுக, திமுக கூட்டணி அமைக்க கனெக்டிங் கால் போட்டுள்ளார்.

இதை அறிந்து தான் மே 5 ம் தேதி டெல்லியில் உயர்நிலை கூட்டத்தை கூட்டி, 6ம் தேதி தவெக கூட்டணி என்ற முடிவை அறிவித்தோம்.

அதிமுக திமுக கூட்டணிக்கு முயற்சி நடந்தது என்பதை சிபிஎம் பொதுச் செயலாளர் பேபி, விசிக தலைவர் திருமாவளவன், ஐயூஎம்எல் தலைவர் காதர் மொகிதீன் உள்ளிட்டோர் உறுதி செய்துள்ளனர். திமுக தனது பொய் நாடகங்களை நிறுத்த வேண்டும். திமுக, அதிமுகவுடன் சேர்ந்து வெகு விரைவாக பாஜகவுடன் கூட்டணி அமைக்கும்.

திமுகவின் கொள்கைகளை உதயநிதி குழிதோண்டி புதைத்துக் கொண்டிருந்தார். அதிமுக உடன் கூட்டணி அமைக்க துள்ளி குதித்தவர் உதயநிதி. நாடாளுமன்றத்தில் தனியாக இடம் கேட்கும் திமுக மெல்ல பாஜக அருகில் சென்று விடும். 2029 பாராளுமன்ற தேர்தலை அதிமுக, திமுக, பாஜக இணைந்து சந்திக்கும்.

இந்த தேர்தலில் போதை பொருள், பெண்கள் பாதுகாப்பு முக்கிய பிரச்சினையாக இருந்தது. மகளிர் பாதுகாப்பு தான் முக்கியம் என முதல்வர் கூறி உள்ளார். இன்னும் அதிகாரிகளை கூட முழுமையாக மாற்றவில்லை. அரசுக்கு உரிய அவகாசம் கொடுக்க வேண்டும்.

இண்டியா கூட்டணியில் எந்த பாதிப்பும் இல்லை. திமுக விலகி விட்டது, அதற்கு பதிலாக தவெக இணைந்துள்ளது. தமிழகத்தில் கூட்டணி அமைச்சரவை நனவாகி உள்ளது. அமைச்சரவையில் இடம் பெற்றதன் மூலம் கூட்டணி மேலும் உறுதியாகி உள்ளது. இந்த கூட்டணி வரும் தேர்தல்களிலும் தொடரும். விரைவில் தவெக கூட்டணிக்கு பெயர் அறிவிக்கப்படும்.

பாஜக அரசின் நிர்வாக சீர்கேட்டால் 10 நாட்களில் பெட்ரோல், டீசல் விலை 3 முறை உயர்ந்துள்ளது. இது மேலும் உயரும். பாஜகவை வீழ்த்த ராகுல் காந்தி தலைமையில் காங்கிரஸ் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது” என தெரிவித்தார்.

காங்கிரஸ் மாவட்ட தலைவர் கிருஷ்ணமூர்த்தி, முன்னாள் எம்.எல்.ஏ அசோகன், வழக்கறிஞர் குப்பையாண்டி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# தமிழகத்தில் சுங்கச்சாவடிகளை ஒட்டியுள்ள உள்ளூர் வாகனங்களுக்கான கட்டணம் உயர்வு

சென்னை, மே.25–

தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலைகளில் 77 இடங்களில் சுங்கச்சாவடிகள் உள்ளன. இவற்றில் சென்னை கன்னியாகுமரி, திருச்சி சேலம், சேலம் கோவை உள்ளிட்ட முக்கிய தேசிய நெடுஞ்சாலைகளில் 60 சுங்கச்சாவடிகள் அமைந்துள்ளன.





சுங்கச்சாவடிகளில் ஒவ்வொரு ஆண்டும் 5 சதவீதம் கட்டணத்தை உயர்த்திக் கொள்ள, தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அனுமதி அளித்துள்ளது. அதன்படி, கடந்த ஏப்.1ம் தேதி முதல் 60 சுங்கச்சாவடிகளில் கட்டணம் உயர்த்தப்பட்டது. இந்நிலையில், தமிழகத்தில் 60 சுங்கச்சாவடிகளை சுற்றியுள்ள உள்ளூர் சிறிய ரக வாகனங்களுக்கான மாதாந்திர கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது.

சென்னையை சுற்றி அதிக சுங்கச்சாவடிகள் உள்ளன. சுங்கச்சாவடிகள் அமைந்த பகுதியில் வசிக்கும் மக்களுக்கு சலுகை அடிப்படையில் மாதாந்திர பாஸ் வழங்கப்படுகின்றன. 20 கி.மீ. சுற்றளவுக்கு உட்பட்டு வசிக்கும் மக்களுக்கு சிறிய ரக வாகனங்களுக்கான மாதாந்திர கட்டணம் ரூ.340ல் இருந்து ரூ.350 ஆக உயர்ந்துள்ளது. ஒரு சில சுங்கச்சாவடிகளில் ரூ.15 உயர்த்தப்பட்டுள்ளது.

# விஜய் முதலமைச்சராக பதவியேற்ற 13 நாட்களில் 30க்கும் அதிகமான குற்றங்கள் நடந்துள்ளன

## நயினார் நாகேந்திரன் குற்றச்சாட்டு

சென்னை, மே.25–

விஜய் முதலமைச்சராக பதவியேற்ற 13 நாட்களில் 30க்கும் அதிகமான குற்றங்கள் நடந்துள்ளன தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார். மேலும் 'சட்டம் ஒழுங்கை சரி செய்யாமல் விதவிதமான விளம்பர பரப்புரைகளில் முதல்வர் கவனம் செலுத்தி வருகிறார். தவெக ஆட்சியில் மக்களின் பாதுகாப்பு அந்தரத்தில் ஊசலாடிக் கொண்டிருக்கிறது நயினார் நாகேந்திரன். குற்றவாளிகளை எல்லாம் அமைச்சர் பதவியில் அமர்த்தினால் குற்றங்கள் எப்படி குறையும்? . விளம்பர பரப்புரைகளில் விஜய் ஈடுபடுவது, அவரது அனுபவமற்ற ஆளுமையைத் தான் காட்டுகிறது' எனவும் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.





# மருத்துவரை தாக்கிய நோயாளி உறவினர்கள் 10 பேர் கைது

புதுடெல்லி, மே.25–

கர்நாடக மாநிலம் பீதர் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் நேற்று முன்தினம் இரவு மருத்துவர் மச்சிந்த்ரா துக்காராம் (28) அவசர சிகிச்சைப் பிரிவில் பணியில் இருந்தார்.

நள்ளிரவு 1 மணியளவில் விஜயா சிங் (47) என்ற நோயாளி, வாகனத்தில் இருந்து கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயங்களுடன் மருத்துவமனைக்கு வந்தார்.

அவருக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கவில்லை என கூறி வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதில் கோபமடைந்த உறவினர்கள் 10க்கும் மேற்பட்டோர் மருத்துவர் துக்காராமை சரமாரியாக தாக்கினர். இது தொடர்பாக வழக்கு பதிவு செய்த போலீஸார் 10 பேரை கைது செய்தனர்.

# எபோலா பரவல்: பயணம் செய்யக்கூடாத நாடுகளின் பட்டியலை வெளியிட்டது மத்திய அரசு

புதுடெல்லி, மே.25–

எபோலா வைரஸ் பரவலை சர்வதேச பொது சுகாதார அவசரநிலையாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்ததைத் தொடர்ந்து, எபோலாவால் பாதிக்கப்பட்ட காங்கோ, உகாண்டா மற்றும் தெற்கு சூடான் ஆகிய நாடுகளுக்கு அத்தியாவசியமற்ற பயணங்களை மேற்கொள்வதைத் தவிர்க் குமாறு இந்தியர்களுக்கு மத்திய சுகாதார அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.





இதுகுறித்து சுகாதார அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், "காங்கோ மற்றும் உகாண்டாவில் எபோலா நோய் பரவல் பதிவாகியுள்ளதன் அடிப்படையில், இதனை சர்வதேச பொது சுகாதார அவசரநிலை (PHEIC) என உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. மேலும், காங்கோ மற்றும் உகாண்டாவில் தற்போது பரவி வரும் எபோலா வைரஸ் நோயின் 'புண்டிபுகியோ' (Bundibugyo) வகைப் பரவலை, ஆப்ரிக்க கண்ட அளவிலான பொது சுகாதார அவசரநிலை (PHECS) என ஆப்பிரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள் (Africa CDC) அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளன.

மே 22 அன்று, உலக சுகாதார நிறுவனம் வெளியிட்ட பரிந்துரைகளின்படி, புண்டிபுகியோ வைரஸ் கண்டறியப்பட்ட பகுதிகளிலிருந்து காய்ச்சல் அறிகுறிகளுடன் வரக்கூடிய பயணிகளைக் கண்டறிந்து, கண்காணிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதே வேளையில், புண்டிபுகியோ வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்ட பகுதிகளுக்குப் பயணம் மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

எனவே மறு அறிவிப்பு வரும் வரை, காங்கோ, உகாண்டா மற்றும் தெற்கு சூடான் ஆகிய நாடுகளுக்கு அத்தியாவசியமற்ற பயணங்களை மேற்கொள்வதைத் தவிர்க்குமாறு இந்திய அரசு அனைத்து இந்தியர்களுக்கும் அறிவுறுத்துகிறது. தற்போது இந்நாடுகளில் வசித்து வருபவர்கள் மற்றும் இந்நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்பவர்கள், உள்ளூர் அதிகாரிகளால் வெளியிடப்படும் பொது சுகாதார வழிகாட்டுதல்களைக் கண்டிப்பாகப் பின்பற்றுமாறும், கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள்" என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மே 21 நிலவரப்படி, காங்கோவில் 746 சந்தேகத்திற்குரிய எபோலா பாதிப்புகளும், அதில் 176 உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன. இதுவரை காங்கோ மற்றும் உகாண்டாவில் 85 பேருக்கு எபோலா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது; இதில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

# சென்னை, புறநகரில் குளிர்ந்த வானிலை: மெரினா உள்ளிட்ட இடங்களில் புழுதிக் காற்று வீசியது

சென்னை, மே.25–

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் கடந்த சில நாட்களாக கடும் வெயில் சுட்டெரித்த நிலையில், நேற்று வெப்பம் குறைந்து குளிர்ச்சியான சூழல் நிலவியதால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.



தமிழகத்தில் கோடை காலம் தொடங்கியதில் இருந்தே உள் மாவட்டங்களில் கடும் வெயில் வாட்டியது. சில நாட்களாக சென்னையில் 104 டிகிரி ஃபாரன்ஹீட்டுக்கு மேல் வெப்பம் பதிவானது. இந்நிலையில், சென்னையில் நேற்று காலை வானிலை சட்டென்று மாறியது. வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. வெப்பம் குறைந்து, குளிர்ச்சியான சூழல் நிலவியது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது: 'சென்னையை ஒட்டி வங்கக் கடல் பகுதியில் சுமார் 3 கி.மீ. உயரத்தில் நிலவும் கீழ் மட்ட கழற்சி மற்றும் கடலோர ஆந்திரா வழியாக நீளும் வடக்கு தெற்கு காற்றழுத்த தாழ்வுப் பாதை ஆகியவற்றின் பரஸ்பர செயல்பாட்டால் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்று (மே 23) மேக மூட்டமான வானிலை நிலவியது.

காலை 8 முதல் 10 மணி வரை வலுவான கடலோரக் காற்று வீசியது. ஈரப்பதம் உள்ள இந்த கடற் காற்று, சென்னை மற்றும் சுற்றுப் பகுதிகளில் கணிசமான அளவில் ஈரப்பதத்தை கொண்டு வந்தது. இவற்றின் காரணமாக மேகங்கள் உருவாகி, வெப்ப நிலை குறைந்துள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

காற்று வீசியது, மோசமான வானிலை நிலவியதால், சென்னையில் விமான சேவைகள் பாதிக்கப்பட்டன. ஹைதராபாத்தில் இருந்து 82 பயணிகளுடன் சென்னை நோக்கி வந்த 'ஏடிஆர்' என்ற சிறிய ரக விமானம் மோசமான வானிலையால் தரையிறங்க முடியாத நிலை ஏற்பட்டது. நீண்ட நேரம் வானில் வட்டமடித்த விமானம், திருப்பதி விமான நிலையத்துக்கு திருப்பிவிடப்பட்டது. துபாய், அபுதாபியில் இருந்து வந்த விமானங்களும் வானில் நீண்ட நேரம் வட்டமடித்தன.

வானிலை சீரானதும் அனைத்து விமானங்களும் தாமதமாக தரையிறங்கின. சென்னையில் இருந்து புறப்பட இருந்த டெல்லி, வாரணாசி, கொல்கத்தா, பெங்களூரு, கோவை, மதுரை, கோலாலம்பூர் விமானங்களும் சுமார் ஒரு மணிநேரம் வரை தாமதமாக புறப்பட்டு சென்றன. இதனால், சென்னை விமான நிலையத்தில் பயணிகள் அவதிக்கு ஆளாகினர்.



# போலீசார் தாக்கியதில் மன உளைச்சலில் தற்கொலைக்கு முயன்ற முதியவர்

# சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

தென்காசி, மே.25–

தென்காசி அருகே சிவகிரி காவல் நிலையத்தில் போலீசார் தாக்கியதில் மன உளைச்சலில் தற்கொலைக்கு முயன்ற முதியவர் அந்தோணி ராஜ் (65) சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். பக்கத்து வீட்டுக்காரர் அளித்த புகாரில் அந்தோணி ராஜை அழைத்து விசாரிக்கும்போது போலீசார் மரியாதை குறைவாக நடத்தியதாகவும், கன்னத்தில் அறைந்ததாகவும் கூறப்படுகிறது.

மீண்டும் மே 21ம் தேதி விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது விஷமருந்திவிட்டு அவர் காவல் நிலையம் சென்றதாகத் தகவல் வெளியாகியுள்ளது. காவல் நிலையத்தில் மயங்கிய அவருக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் . முதியவர் அந்தோணி ராஜை தாக்கியதாகக் கூறப்படும் காவல் ஆய்வாளர் முரளிதரன் காத்திருப்பு பட்டியலுக்கு மாற்றம் செய்து நெல்லை சரக டிஐஜி சேகர் தேஷ்முக் உத்தரவிட்டுள்ளார்.

# மெரினாவில் ராட்சத அலையில் சிக்கி மாணவன் மாயம்: மகனை காப்பாற்ற முதல்வருக்கு தாய் வேண்டுகோள்

சென்னை, மே.25–

ஆவடியை அடுத்த கோவில் பதாகை மேட்டு தெருவில் வசித்து வருபவர் கணேசன். இவரது மகன் சுதர்சன் (16) அதே பகுதியில் உள்ள பள்ளியில் 12ம் வகுப்பு படித்து வருகிறார். இவர் தனது குடும்பத்தினருடன் நேற்று முன்தினம் மெரினா கடற்கரைக்கு சென்றார். மெரினா கண்ணகி சிலை பின்புறம் தனது தம்பி கமலேஷ் உடன் கடலில் இறங்கி விளையாடிக் கொண்டிருந்தார்.



அப்போது, திடீரென தம்பி கமலேஷை ராட்சத அலை இழுத்து சென்றுள்ளது. உடனடியாக தம்பியை காப்பாற்றுவதற்காக சுதர்சன் கையைப் பிடித்து இழுத்து உள்ளார். அப்போது, தம்பி கரைக்கு வந்துவிட்ட நிலையில், சுதர்சன் ராட்சத அலையில் சிக்கி கடலுக்குள் இழுத்து செல்லப்பட்டார்.

இதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த தந்தை கணேசன், தம்பி கமலேஷ் ஆகியோர் பதற்றம் அடைந்து கூச்சலிட்டுள்ளனர். கடல் அலையில் சிக்கி காணாமல் போன மாணவரை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக மெரினா போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனிடையே, மாணவனின் தாய் நேற்று, விஜய்க்கு என்னை ஓட்டுப்போட சொல்லி வற்புறுத்திய மகன் தற்போது இல்லை எனவும், முதல்வர் விஜய் தனது மகனை காப்பாற்ற வேண்டும் என்றும் உருக்கமாக வேண்டு கோள் விடுத்தார்.

# த.வெ.க., தலைமையிலான கூட்டணி ஆட்சிக்கு ராமதாஸ் வரவேற்பு புதிய அரசியல் பண்பாட்டை உருவாக்க வலியுறுத்தல்

சென்னை, மே.25–

தமிழகத்தில் அமைந்துள்ள கூட்டணி அமைச்சரவையை வரவேற்பதாகவும், கூட்டணி ஆட்சி தமிழக அரசியலில் புதிய அரசியல் பண்பாட்டை உருவாக்க வேண்டும் என்றும் பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழகத்தில் கூட்டணி ஆட்சி என்ற அரசியல் நிலைப்பாட்டை பல ஆண்டுகளுக்கு முன்பே முன்வைத்த கட்சி பாமக. அதிகாரம் ஒரே கட்சியிடம் மட்டுமே குவியாமல், பல்வேறு அரசியல் சிந்தனைகளுக்கும் சமூகப் பிரதிநிதித்துவத்துக்கும் இடமளிக்கும் ஆட்சி முறைதான் ஜனநாயகத்தின் உண்மையான வடிவம் என்று பாமக தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது.

தற்போது தமிழக மக்கள் வழங்கியுள்ள தீர்ப்பின் அடிப்படையில் மாநிலத்தில் கூட்டணி ஆட்சி அமைந்துள்ளது. இந்த கூட்டணி அரசில் இடம்பெற்றுள்ள கூட்டணிக் கட்சிகளுக்கு அமைச்சரவையில் உரிய பங்கு வழங்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க அரசியல் முன்னேற்றமாகும். இது தமிழக அரசியலில் புதிய அரசியல் பண்பாட்டை உருவாக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

கூட்டணிக்கு தலைமை வகிக்கும் தவெக, கூட்டணிக் கட்சிகளின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் மதித்து செயல்படுவது ஜனநாயகத்திற்கு வலுசேர்க்கும்.



ஆட்சி என்பது ஒரே கட்சியின் விருப்பப்படி நடைபெறுவது அல்ல; கூட்டணியில் உள்ள அனைத்து கட்சிகளின் அனுபவமும், கருத்தும், மக்கள் நலப் பார்வையும் இணைந்தால் மட்டுமே நல்லாட்சியை வழங்க முடியும்.

கூட்டணிக் கட்சிகளின் பங்களிப்பு அமைச்சரவைப் பதவிகளில் மட்டும் முடங்கிவிடக் கூடாது. அரசின் கொள்கைகள் வகுப்பதிலும், மக்கள் நலத் திட்டங்களை திட்டமிடுவதிலும், நிர்வாக குறைபாடுகளை சுட்டிக்காட்டுவதிலும், மாற்று ஆலோசனைகளை வழங்குவதிலும் அவர்களின் பங்கு முக்கியமானதாக இருக்க வேண்டும். அதுவே கூட்டணி ஆட்சியின் உண்மையான நோக்கமாகும்.

கூட்டணி ஆட்சி என்பது அதிகாரப் பகிர்வு மட்டுமல்ல; அது பொறுப்புப் பகிர்வும் ஆகும். மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்காக கூட்டணியில் உள்ள அனைத்து கட்சிகளும் ஒருமித்த அணுகுமுறையுடன் செயல்பட வேண்டும். தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்றுதல், சமூக நீதி, கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு, விவசாயம் உள்ளிட்ட துறைகளில் மக்கள் நல முன்னேற்றங்களை ஏற்படுத்துதல் ஆகியவற்றில் இந்த அரசு கவனம் செலுத்த வேண்டும்.

தமிழகத்தின் தற்போதைய கூட்டணி அமைச்சரவை ஜனநாயகத்திற்கும், அரசியல் நாகரிகத்திற்கும் நல்ல முன்னுதாரணமாக அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். கூட்டணி அரசின் இந்த தொடக்கம் மக்கள் நலனுக்கான சிறந்த ஆட்சியாக மலர வேண்டும் என்பதோடு, தமிழகத்தின் வளர்ச்சிக்கும் அரசியல் நிலைத்தன்மைக்கும் வழிவகுக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்” என தெரிவித்துள்ளார்.

# அரசுப் பள்ளி மாணவியின் உலகளாவிய சாதனை: ஜப்பான் பறந்தார் ஈரோடு கனிஷ்கா



ஈரோடு மே 25-
ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி ஒன்றியம் கணபதிபாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவி எஸ்.கனிஷ்கா, தென்னிந்திய அறிவியல் கண்காட்சி மற்றும் தேசிய அளவிலான அறிவியல் போட்டிகளில் தொடர்ந்து சாதனை படைத்து வந்தார். இதன் மூலம், ஜப்பான் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் சார்பில் நடத்தப்படும் மதிப்புமிக்க "சகுரா சயின்ஸ் உயர்நிலைப்பள்ளி திட்டம் 2026" மூலம் ஜப்பான் செல்லத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இத்திட்டத்தின் கீழ் ஒட்டுமொத்த தமிழ்நாட்டிலிருந்தே வெறும் 4 அரசுப் பள்ளி மாணவர்கள் மற்றும் 1 ஆசிரியர் மட்டுமே தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அதில் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த மாணவி எஸ்.கனிஷ்காவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.மே 24 முதல் மே 30 வரை ஜப்பானில் நடைபெறும் இந்த சர்வதேச அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வித் திட்டத்தில் மாணவி கனிஷ்கா பங்கேற்க உள்ளார். அரசுப் பள்ளி மாணவியின் இந்த இமாலயச் சாதனைக்கு அப்பள்ளியின் தலைமை ஆசிரியர், ஆசிரியப் பெருமக்கள் மற்றும் பொதுமக்கள் தங்களது நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.



## சி.பா.ஆதித்தனாரின் 45வது நினைவு நாள்

# அகரக்கட்டில் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து வீராஞ்சலி

அகரக்கட்டு,மே 25-
தமிழ்ப் பத்திரிக்கை உலகின் முன்னோடியும், 'உயிர் தமிழுக்கு, உடல் மண்ணுக்கு' என்று முழங்கியவருமான சி.பா. ஆதித்தனார் அவர்களின் 45 வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, அகரக்கட்டில் உள்ள தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் தலைமை அலுவலகத்தில் புகழஞ்சலி செலுத்தப்பட்டது. மாநிலக் கல்விக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் பாலசுப்பிரமணியன் தலைமையில் சி.பா. ஆதித்தனாரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.
இந்நிகழ்வில், தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் கலந்து கொண்டு, 10 மற்றும் 12ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவமாணவிகளுக்குச் சி.பா.ஆதித்தனார் நினைவாகப் பரிசுகளை வழங்கிப் பேசினார். அப்போது அவர், "1942 லேயே ஆங்கிலேயர்களிடம் அடிபணியாமல், கடல் கடந்து ஆண்ட தமிழர்களின் வீரப் பாரம்பரியத்திற்காகத் 'தனித் தமிழ்நாடு' வேண்டும் என்று முழங்கியவர் சி.பா.ஆதித்தனார். மொழிப்பற்றும் வீரமும் நிறைந்த தமிழர்கள் யாரிடமும் கையேந்தி நிற்கக் கூடாது என்று நினைத்த அந்த மாமனிதரின் நினைவு நாளில் புகழஞ்சலி செலுத்துவதில் பெருமை கொள்கிறோம்" என உணர்ச்சிப் பெருக்குடன் பேசினார். இவ்விழாவில் குருசாமி நாடார், சக்திவேல், கிருஷ்ணமூர்த்தி, தவசி, செல்வா உள்ளிட்ட சமுதாயப் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



# தலைவரே பேசும்போது தட்ட முடியுமா?" ஸ்டாலினின் அன்பான கட்டளையை ஏற்று மீண்டும் மா.செவாக க.செல்வராஜ் அதிரடி

திருப்பூர்,மே 25-
திருப்பூர் மத்திய மாவட்ட திமுக செயலாளரும், முன்னாள் எம்.எல்.ஏ வுமான க.செல்வராஜ் அண்மையில் கட்சிப் பொறுப்புகளில் இருந்து விலகப் போவதாக அறிவித்திருந்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையில், திமுக தலைமையின் சமரச பேச்சுவார்த்தை மற்றும் அறிவுறுத்தலை ஏற்று, தான் மீண்டும் மாவட்டச் செயலாளராகத் தொடர்வதாக அவர் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்.இதனைத் தொடர்ந்து, திருப்பூர் ரயில் நிலையம் முன்பாக அமைந்துள்ள தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணா ஆகியோரின் சிலைகளுக்கு, கட்சி நிர்வாகிகள் மற்றும் நூற்றுக்கணக்கான தொண்டர்களுடன் வருகை தந்த க.செல்வராஜ் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதனைத் தொடர்ந்து, திருப்பூர் ராஜா ராவ் வீதியில் உள்ள மத்திய மாவட்ட திமுக அலுவலகத்திற்குச் சென்று அங்குள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய க.செல்வராஜ், "நான் பொறுப்பில் இருந்து விலகினாலும் வேறு எந்தக் கட்சிக்கும் செல்லாமல் திமுகவின் அனுதாபியாகவே நீடிக்க முடிவு செய்திருந்தேன். மீண்டும் மு.க.ஸ்டாலின் அவர்களே தமிழகத்தின் முதலமைச்சராக வர வேண்டும் என்பதே என் விருப்பம். கழகத் தலைவரே நேரடியாகத் தொடர்புகொண்டு பேசியதால், அவரது அன்பான கட்டளையைத் தட்ட முடியாமல் மீண்டும் கட்சிப் பணியாற்ற வந்துள்ளேன். இதைவிட ஒரு சாதாரணத் தொண்டனுக்கு வேறு என்ன பெருமை வேண்டும்" என்று உணர்ச்சிப் பெருக்குடன் தெரிவித்தார். இந்நிகழ்வின் போது க.செல்வராஜ் முன்னிலையில் மாற்றுத் திறனாய்வு மற்றும் மாற்று அரசியல் கட்சியினர் பலர் தங்களை திமுகவில் இணைத்துக் கொண்டனர்.

# திருப்பூர் மதிமுகவில் பெருவெடிப்பு: 35 வருட உழைப்புக்கு மரியாதையில்லை என தவெகவில் ஐக்கியமானார் நாகராஜ்



திருப்பூர்- மே 25-
மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தில் (மதிமுக) தங்களுக்குப் போதிய அங்கீகாரம் மற்றும் மரியாதை கிடைக்கவில்லை என்று கூறி, அக்கட்சியின் திருப்பூர் மாவட்டச் செயலாளர் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட முக்கிய நிர்வாகிகள், ஒட்டுமொத்தமாகக் கட்சியிலிருந்து விலகி, நடிகர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகத்தில் (தவெக) தங்களை இணைத்துக் கொண்டனர்.இது குறித்துச் செய்தியாளர்களிடம் பேசிய மதிமுக முன்னாள் மாவட்டச் செயலாளர் நாகராஜ், "நாங்கள் 35 வருடங்களாக உழைத்தும் இந்த டிஜிட்டல் மற்றும் ஏஐ (AI) காலத்தில் கூகுளில் தேடினால் மதிமுக என்று ஒரு கட்சியே இல்லை என்றுதான் காட்டுகிறது. கட்சியின் சின்னம் மற்றும் அங்கீகாரம் குறித்து பொதுச்செயலாளர் வைகோ அவர்களிடம் கேட்டபோது, 'இதைப் பற்றிப் பேசுவதாக இருந்தால் கட்சியை விட்டு வெளியேறலாம்' என்று கறாராகக் கூறி விட்டார். இனிஷியல் இல்லாமல் எப்படி வாழ முடியும்? இன்றைய தலைமுறை இளைஞர்கள் தவெக தலைவர் விஜய்யை அண்ணனாக ஏற்றுக்கொண்டு ஆதரிக்கின்றனர். எங்களுக்குத் தவெகவில் பதவியே தேவையில்லை, எங்களது சேவையைப் பார்த்துத் தலைவர் விஜய் ஒரு 'லைக்' (Like) போட்டாலே போதும்" என உணர்ச்சிப் பெருக்குடன் தெரிவித்தார்.
திருப்பூர் மாவட்டத்தில் மதிமுகவின் முக்கிய தூண்கள் ஒட்டுமொத்தமாக விலகி, விஜய்யின் தவெகவில் இணைந்துள்ள இந்தச் சம்பவம் தமிழக அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



■ திருப்பூர் ராக்கியாபாளையம் பகுதியில் வசித்து வரும் 'ஸ்ரீ ஹரி கார்மெண்ட்ஸ்' பின்னலாடை நிறுவனத்தின் உரிமையாளர் பி. சீனிவாசன், தமிழக வெற்றிக் கழகத்தின் திருப்பூர் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சத்தியபாமா, முன்னிலையில் தன்னை முறைப்படி தமிழக வெற்றிக் கழகத்தில் இணைத்துக் கொண்டார். தமிழக வெற்றிக் கழகத்தில் புதிய உறுப்பினராகத் தன்னை இணைத்துக் கொண்ட பின்னலாடை நிறுவனர் பி. சீனிவாசன் அவர்களுக்கு, அவரது நண்பர்கள், தொழிலதிபர்கள் மற்றும் உறவினர்கள் திரளாக நேரில் சந்தித்துத் தங்களது வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்து வருகின்றனர்.



# சரந்தாங்கி கிராமத்தில் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் சிலைக்கு தவெக எம்.எல்.ஏ கருப்பையா மாலை மரியாதை

அலங்காநல்லூர் மே 25-
மதுரை மாவட்டம் பாலமேடு அருகே உள்ள சரந்தாங்கி கிராமத்தில், பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் சதய விழாவினை முன்னிட்டுத் தமிழக வெற்றிக் கழகத்தின் (தவெக) மாவட்டச் செயலாளர் விஷால்கிருஷ்ணா தலைமையில், ஒன்றியச் செயலாளர் விஜய்ஹரிஷ் மற்றும் வடக்கு ஒன்றிய நிர்வாகி கார்த்திக் முன்னிலையில் சிறப்பு விழா நடைபெற்றது. இதில் தவெக சட்டமன்ற உறுப்பினர் கருப்பையா நேரில் கலந்துகொண்டு, அங்கு அமைந்துள்ள பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் சிலைக்கு மாலை அணிவித்து மதிக்கத்தக்க வகையில் மரியாதை செலுத்தினார்.
அதனைத் தொடர்ந்து, வெள்ளையம்பட்டி பகுதியில் வடக்கு ஒன்றிய நிர்வாகி கார்த்திக் ஏற்பாட்டில் அமைக்கப்பட்டிருந்த கோடைகால நீர்மோர் பந்தலை எம்.எல்.ஏ கருப்பையா திறந்து வைத்தார். பின்னர் அங்கு கூடிருந்த பொதுமக்களுக்கு நீர்மோர், சர்பத், ரஸ்னா உள்ளிட்ட குளிர் பானங்களை வழங்கினார். இந்நிகழ்வில் பாலமேடு பேரூர் செயலாளர் புகழ், மேற்கு ஒன்றியச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, வடக்கு ஒன்றிய நிர்வாகி தனசேகரன், இணைச் செயலாளர் ராமநாதன், வலையபட்டி கிளைச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, அலங்காநல்லூர் பேரூராட்சி முன்னாள் சேர்மன் கீதாபாலாஜி, தவெகவில் அண்மையில் இணைந்த மதுரை மேற்கு ஒன்றிய நிர்வாகியும் தொழிலதிபருமான அரியூர் ராதாகிருஷ்ணன், வெள்ளையன்பட்டி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் அசோகன், வாடிப்பட்டி வழக்கறிஞர் தியாகராஜன், மற்றும் தாமு, சிறுவாலை செல்வம், ராஜ்குமார், கண்ணன், வெள்ளைகெங்கை உட்படக் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் திரளாகக் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம் பாலமேடு அருகே உள்ள சரந்தாங்கி கிராமத்தில்பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் சதய விழாவையொட்டிஅங்கு அமைந்துள்ள அவரது சிலைக்கு அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் மதுரை வடக்கு மாவட்டம் முன்னாள் தலைவர் ஆலத்தூர் ரவிச்சந்திரன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.இதில் மாவட்ட செயலாளர் நித்தியபிரியா,பொதுக்குழு உறுப்பினர்கள் முருகன், ஜெயமணி,வட்டார தலைவர்கள் சுப்பராயலு, காந்தி,நகரத் தலைவர் வைரமணி வட்டார துணைத் தலைவர் திரவியம்,உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் முத்து நன்றி கூறினார்.

# "முஸ்லிம்கள் தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வெளிப்படையாக எழுப்ப வேண்டும்" ராகுல் காந்தி

புதுடெல்லி: மே 25-
தாங்கள் எதிர்கொள்ளும் சமூக பிரச்சினைகளை முஸ்லிம்கள் வெளிப்படையாக எழுப்ப வேண்டும் என்று ராகுல் காந்தி அறிவுறுத்தியுள்ளார்.
டெல்லியில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சிறுபான்மைத் தலைவர்கள் கூட்டத்தில் அக்கட்சியின் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி பேசினார். அப்போது அவர் பேசியது குறித்து காங்கிரஸ் வட்டாரங்கள் கூறுகையில், "கூட்டத்தில் பேசிய தலைவர் ராகுல், எந்தவொரு முஸ்லிமும் அநீதிக்கு ஆளானால், அதை எதிர்த்து குரல் கொடுப்பது அவசியம் என தெரிவித்தார். ஒரு சிறுபான்மைக் குழுவின் உறுப்பினராக மட்டுமல்லாமல், தான் ஒரு 'முஸ்லிம்' என்ற வகையிலும் ஒருவர் தனது குரலை எழுப்ப வேண்டும் என ராகுல் வலியுறுத்தினார்.



இதேபோல், தலித்துகள், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பொதுப் பிரிவினர் பற்றியும் ராகுல் கூட்டத்தில் பேசினார். தங்கள் மீது தாக்குதல்கள் நடந்தால், அந்தக் குறிப்பிட்ட சமூகத்தைத் தெளிவாக அடையாளம் காட்டி அந்தப் பிரச்சினை எழுப்பப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.
சமீப காலங்களாக பொதுமக்கள் இடையே, 'முஸ்லிம்' என்று வெளிப்படையாகக் கூறுவதற்குப் பதிலாக 'சிறுபான்மையினர்' என்ற சொல் பயன்படுத்துகிறது என்றும், சிறுபான்மையினரை 'முஸ்லிம்' எனக் குறிப்பிட்டு அழைக்க கட்சியினர் தயங்கக்கூடாது என்றும் ராகுல் காந்தி குறிப்பிட்டார்" என தெரிவித்தன.
கடந்த 2014ல் பாஜக தலைமையிலான ஆட்சிக்கு பிரதமராக நரேந்திரமோடி வந்திலிருந்து சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் அதிகரித்திருப்பதாகக் கருதப்படுகிறது. இதை அரசியலாக்கும் பொருட்டு காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி இக்கூட்டத்தை நடத்தியதாக கூறப்படுகிறது.




# 12ம் வகுப்பு மாணவர்களின் மறுமதிப்பீடு கட்டண வசூல் குளறுபடி குறித்து சிபிஎஸ்இ விளக்கம்

டெல்லி:மே 25-
சிபிஎஸ்இ 12ம் வகுப்பு மாணவர்களின் விடைத்தாள் மறுமதிப்பீடு கட்டண வசூலில் குளறுபடி என புகார் எழுந்ததையடுத்து சிபிஎஸ்இ விளக்கமளித்துள்ளது. மறுமதிப்பீட்டுக்கு விண்ணப்பித்த மாணவர்களிடம் பெறப்பட்ட கூடுதல் கட்டணம் திருப்பி தரப்படும். குறைவாக காட்டிய கட்டணத்தை செலுத்திய மாணவர்கள் எஞ்சிய தொகையை செலுத்த அறிவுறுத்தல். பாதிக்கப்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் நிவாரணம் தரப்படும்' என சிபிஎஸ்இ உறுதியளித்துள்ளது




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000